ஆகஸ்ட்-செப்ரெம்பர் - 2009

# வெட்டை மலர்கள்

வெளியீடு

காவேரி கலாமன்றம்

பறாளாய் வீதி,

சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

*எங்கள் வாழ்வில் ஒளியேற்றிய*
*அன்பின் உள்ளங்களுக்கும்*
TLMI *நிறுவனத்திற்கும்*
*இந்த முதல் வெளியீட்டை சர்ப்பணம்*
*செய்கின்றோம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலாண்டு சஞ்சிகை

**வெட்டை மலர்கள்**
(கிராமிய சிந்தனை ஊற்று
ஆகஸ்ட் - செப்ரெம்பர் - 2009)

**வெளியீடு - 01 மலர் - 01**

ஆசிரியர்
செல்வி.T.தயாராணி

**சஞ்சிகை செயற்குழு**
திரு.Y.புஸ்பராசா
திரு.P.ஐங்கரன்
திரு.N.இராசேந்திரகுமார்
செல்வி.S.ரோகினி

**விநியோகம்**
திரு.P.ஜெயகரன்

## பொருளடக்கம்

| | |
|---|---|
| நல்ல கல்வி தேடித்தேடி | 01 |
| அறிமலர் செண்டு | 02 |
| மாணவனே மாணவனே | 03 |
| ஓ கல்வியே | 04 |
| கல்வி அழிவதில்லை | 05 |
| கல்விக்காய் வந்துபோகிறேன் | 06 |
| ரோஜாப்பூ | 07 |
| கல்வி இறைவன் தந்தது | 08 |
| கல்விக்கு எல்லையில்லை | 09 |
| அறிவு | 10 |
| கல்வி நிலவே அறிவு | 11 |
| ஆசான் | 13 |
| அம்மா நான் படிக்கப்போகிறேன் | 14 |
| படித்திடு தோழா | 15 |
| சுந்தரக்கல்வி வேண்டும் | 16 |
| கல்விக்கண் | 17 |
| நூல்கள் | 18 |
| விடுதலை | 19 |
| பொறுமையைப் பேணுவோம் | 20 |
| ஒற்றுமையின் பலம் | 22 |
| கல்வியின் மேன்மை | 23 |
| உதவி | 24 |
| ஏழையின் கல்வி | 25 |
| ஏழைக்குடும்பம் | 26 |
| முயற்சி | 27 |
| ஏணி | 28 |
| பழமொழிகளும் கருத்துக்களும் | 29 |
| விடுகதைகள் | 30 |
| கல்வியும் உழைப்பும் | 31 |
| நகைச்சுவை துணுக்குகள் | 33 |
| காவேரி கலாமன்றத்தின் செய்திகள் | 34 |
| சிந்தனைக்கு ஒருகணம் | |
| காலத்தில் உன் பெயரை எழுதிவை | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பார்வையில்

ஆண்டாண்டுட காலமாக அறியாமை இருளில் அடைந்து கிடந்த மக்கள் வாழ்வில் பேரொளி ஒன்று தென் இந்தியத்திருச்சபை வழியாக LMI திட்டத்தின் மூலம் இறையடியார் பணிக்கூடாக வீசத்தொடங்கியது. மாற்றங்கள், சிறிது சிறிதாக, கல்வி, பொருளாதாரம், கலை, ஒழுக்கம், சுகாதாரம், மேம்பாடு என பல அம்சங்கள் கொண்ட மானிடத்தின் புதிய வாழ்வின் பரிமானங்கள் உருப்பெறத் தொடங்கியது. கடந்த 10 வருடங்களாக உருவாக்கம் பெற்ற எமது உணர்வுகளின் வெளிப்பாடாகவே காவேரி கலாமன்றம் உருவாகி கலைவழி, மானிட மேம்பாடு என்ற உயர்ந்த எண்ணத்தோடு இன்று எமது அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளது. இதில் எமது முகவரியை உலகிற்கு விளம்பி நிற்கும் பணியை "வெட்டை மலர்கள்" என்ற சஞ்சிகை வெளிக்காட்டி நிற்கிறது. வெட்டை என்பது வெப்பம், கடினம், வெறுமை என்ற கருத்தைக் கொண்டது இந்த வெட்டையிலிருந்தும் மலர்கள் மலரும், மாலைகளாய் இணையும் என்ற புதிய பயணத்தில் எங்கள் உணர்வுகள் வெளிப்படுத்தும் ஊடாகமாய் வெளியீடுகின்றோம் இந்த வெளியீட்டுக்கு பங்களிப்பு செய்யும் யாவருக்கம் எனது நன்றிகள்.

**இங்ஙனம்**
**உங்கள் T.தயாறாணி**
**ஆசிரியர்**
**செயலாளர்**
**காவேரி கலாமன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல கல்வி தேடித்தேடி

பல்லவி

நல்ல கல்வித் தேடித்தேடி பள்ளிச் செல்கிறோம்
நல்ல உயர்வு பெற்றிடவே வேண்டி பயில்கிறோம்
நல்ல ரியூசன் தேடித்தேடித் துடிக்கின்றோம்
நல்ல பலம் பெற்றிடவே ஓடிக்கற்கின்றோம்

சரணங்கள்

சில கல்வி மனதருகே பதிந்தது பதிந்தது
சில கல்வி மனதை விட்டு சென்றது சென்றது
சில கல்வி கண்ணீரைத் துடைத்தது துடைத்தது
சில கல்வி சந்தோஷத்தை கொடுத்தது கொடுத்தது

சின்னஞ்சிறு மாணவரே பாடுங்கள்
பாண்டவட்டை தோழர்களே கேழுங்கள்
வறுத்தோலை தோழியரே பாடுங்கள்
சின்னஞ்சிறு சிட்டுக்களே ஆடுங்கள்
அன்பான பெற்றோர்களே பாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு மலர்ச்செண்டு

மறக்கத் தெரியவில்லை எனது கல்வியை
மறக்கும் அறிவு இல்லை எனது கல்வியை
சிறகுகள் முளைக்கும் முன்னே கல்வியைக்
கற்றுக் கொண்டேன் என் கல்வியே

அறிவு மலர்ச்செண்டு நான் கொண்டு வந்தேன்
கல்வி கற்காமல் உயிர் வாழ நின்றேன்
கல்விக்காகத் தானே நான் வாழ்ந்து வந்தேன்
அறிவைப் பரிசாகத் தந்தேன்
சொந்தம் ஆகாது சொல்லாது கல்வி
அறிவு இல்லாமல் சேராது கல்வி
நம் கல்வியே

கல்வி கற்காமல் ஒரு நாளும் இல்லை
கல்வி பிரிந்தாயே உயிர் சொந்தமில்லை
கடல் நீரும் போல கரைதேடிப் போகும்
என் கல்வியி தடுமாற்றம் இல்லை
கல்வி தீயோடு வேகும் போது
நெஞ்சம் என் நெஞ்சம் தாங்கவில்லை
கல்வி அழியாதம்மா

ஞா.கயில்விழி
தரம் -7B
அறிவுகல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரே மாணவரே

மாணவரே மாணவரே கல்வி கற்கும் மாணவரே
ஆசானின் சொல்லைக் கேட்டு
நடந்த கொள்ளுங்களேன்.

கஸ்ரப்பட்டுப் படித்தவர்கள் முன்னேறிவரவில்லையா
வறுமையில் இருந்தவர்கள் கல்வியால் உயரலயா
ஒடைக்கு வாயிருக்க பாட்டுப் படிக்கலையா
கல்வி இல்லை என்றால் உயர்ந்தாலும் உயர்வு நிலைக்குமா

அட ஒரு நாளில் உயர்ந்தாலும் உயர்வு நிலைக்குமே
இறக்கைகள் ஏதுமின்றி இந்த பட்டம் பறக்கலையா
அட ஒரு நாளில் உயர்ந்தாலும் உயர்வு நிலைக்குமே
மனிதர் இனம் மீது பலகாயம் உண்டு தோழர்

காயம் இருந்தாலும் கல்வி உயர்வைத் தரும் தோழா
மேற்கில் மறைவதெல்லாம் மரணமாவதில்லை
கிழக்கில் வெளிச்சம் தர மறந்து போவதில்லை
விடியல்கள் உண்டு எழுந்திடுத்தோழா

**தேவராசா கிருஷா**
**நாகராசா – ஜெனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ கல்வியே

ஓ கல்வியே உயிரில் தஞ்சமே
நம் கல்வி தான் படனும் கொஞ்சமே
ஓடி வந்து கல்வி கற்க ஆசை ஆசைதான்
இதய துடிப்பில் கல்வியின் பெயரின் ஓசை - (2)
ஓசை தான்

ஓ கல்வியே

மூளையிலே கல்வியை பதிக்கிறோம்
பரீட்சையிலே அதனை மறக்கிறோம்
கல்வியெங்கே கல்வியெங்கே
நாம் கற்ற கல்வி எங்கே
கல்வி தீயாய் ஆவதோ
வா வா கல்வியே ஓடிவா
மனதில் ஆழமாய் பதியவா

ஓ கலவியே

மனதில் கல்வியினை நினைக்கிறேன்
கற்பதற்கு நாமும் வெறுக்கிறோம்
கல்வியிலே வெற்றிபெற நினைக்கிறோம்
கடைசியிலே அதை மறக்கின்றோம்
வா வா மாணவரே ஓடி வா
கல்வியில் உயந்திட ஓடி வா

செல்லையா பவிதா
தரம் - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அழிவதில்லை

கல்வி அழிவதில்லை கல்வி அலையால் ஓய்வதில்லை
கல்வி வா என்றால் வருவதில்லை
கல்வி போ என்றால் போவதில்லை
படிச்சா படிச்சது தான் யாரும் அழிச்சாலும் அழியாது
கல்வி கல்வி அது அழிவதில்லை
கடல் அலைபோல் கடல் அலைபோல்
அது ஓய்வதில்லை.

கல்வித் தீபாவளி நெஞ்சில் தந்தால் வலி
ஒரு முறை படித்து விட்டால்
மறக்கவும் முடியாது நெருப்பு வைத்துச் சுட்டால் கூட
கல்வி என்றும் அழியாது
மாணவனே... உனக்கது தெரியாதா?
கல்வி அழிவதில்லை புரியாதா?
படிப்பு படிப்புத்தான் சிறந்தது -2
கற்பது கற்பது தான் தெரியவில்லை - 2

(கல்வித் தீபாவளி)

பெற்றவங்க ஒப்புதல் தந்தால்
நாமும் கல்வி கற்றோம்
மற்றவங்க ஒப்புதல் தந்தால்
நீயும் நாம் படித்திடுவாய்
அந்தஸ்தையும் பணத்தையும் மட்டும்
பெற்றோர் சிலர் மதிப்பாங்க
படிக்க நினைக்கும் பிள்ளைகள்
மனசை பிரிச்சா வைக்கப்பாப்பாங்க
புத்தகத்தைக் கிழிச்சாலும் பறித்து
அதை எறிந்தாலும்
கல்வி... உள்ளம் மட்டும் அழியாது

(கல்வித் தீபாவளி)

ஆக்கம் :- த. கௌசலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்காய் வந்து போகிறேன்

கல்விக்காய் வந்து போகிறேன்
ஆசானே உன்னைத் தேடினேன்
யாரிடம் கல்வி கற்பது
என்று தான் உன்னைத் தேடினேன்
ஆசானே - 2
கல்வி என்பதும் கல்வி கற்பதும்
இதுதானே ஆரம்பம்
அடடா கல்வி பறிபோனதே
என்று தான் ஏன் கலக்கம்
கல்வி அழகானதா இல்லை அறிவானதா?
கல்வி சுகமானதா இல்லை சுமையானதா?
ஆசானே....2
கல்வி கற்பதால் செல்லும் இடமெல்லம்
சிறப்புக்களைப் பெற்றிடலாம்
அடடா! கல்வி இல்லை என்றால்
வாழ்க்கையில் கவலைகள் தான்
கல்வி கற்பதா சுகமா? வேலை செய்வது சுகமா?
பட்டம் பெறுவது சுகமா!
பட்டம் விடுவது சுகமா?
(மாணவனே...2)
கல்விக்காய் வந்து போகிறாய்
மாணவனே என்னைத் தேடினாய்
யாரிடம் கல்வி கற்பது என்று தான் என்னை நாடினாய்
(மாணவனே...2)

ஆக்கம்:- சி. சுதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜாப்பூ

ரோஜாப்பூ காலையிலே ஒரு மாணவர் கூட்டம் சேர்கின்றதே
இந்த மாணவர் கூட்டத்திலே ஒரு கல்விப்புறா கூடுதே
எங்கள் நெஞ்சமெல்லாம் மகிழுதே......
(ரோஜாப்பூ ........)

இன்பம் பொங்கும் கல்வி சோலையில்
இன்னொரு கல்விக்கூடம் சேர்ந்திடுதே...
எங்கள் கல்விக் கூட்டத்திலே
எங்கள் கைகள் தீபம் ஏற்றிடுதே... ஆ....
உன்பெயரை தன் கல்வியில் சேர்த்திடுவாள்
இனி நீ கல்வியில் உயர வழிகாட்டுவார்.
(ரோஜாப்பூ ........)

தீமை விட்டு நன்மை சேர்ந்தால்
எங்கள் வாழ்வில் தேரோட்டம் ஆ....
காலம் எல்லாம் வாழும் கல்வி
ஆயிரம் ஜென்மம் சேர்ந்து வாழுமே ஆ....
ஒரு கோடி பூத்தூவி ஊர் வாழ்த்த
கல்வி என்னும் சோலையிலே உயர்ந்து வாழ....ஆ
(ரோஜாப்பூ ........)

ஆக்கம்— கு. கிருபாநந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி இறைவன் தந்தது

கல்வி கற்கும் சிறுவர் நாங்கள்
படிக்கும் போது அறிவு கூடும்
சிறுவர் நாங்கள் கற்கும் சிறுவர் நாங்கள் - 2
தூங்கினேனே இருந்தேனே அறிவு வளரல
படித்தேனே படித்தேனே அறிவு வளர்ந்தது
சிறுவர் நாங்கள் கற்கும் சிறுவர் நாங்கள் - 2
(கல்வி....)

நாம் சிரித்தால் இந்த உலகமே மகிழ்ச்சி அடையுமே
நாம் படித்து இந்த உலகினிலே உயர்ந்திடுவோமே
அம்மா அம்மா நாங்கள் படிக்கப் போகிறோம்
கல்வி கற்று நாங்கள் உம்மைக் காப்போமே
எம் இறைவன் தந்த அருங்கொடை
சகித்திடாமல் கற்போமே
தாய் தந்தை குரு எமது தெய்வம் தானே
கல்வித் தாயே எம் அறிவை உயர்த்திடு-2
வென்ற வென்று எழுவோமே உயர்ந்து
நாங்கள் வாழ்வோமே
சிறுவர் நாங்கள் கற்கும் சிறுவர் நாங்கள் - 2
(கல்வி....)

நாம் உயர்ந்து இந்த உலகையும் உயர்ந்திடுவோமே
ஏணி...தான் எம் வாழ்வின் முறை தானே
துன்பமும் துக்கமும் இப்போ எமக்கு தெரியல
வளரும் வரைக்கும் நாம் கல்வி கற்போமே
எம் இறைவன் தந்த அருங்கொடை
சேர்ந்திடாமல் கற்போமே
தாய் தந்தை குரு எமது தெய்வம் தானே
கல்வித் தாயே எம் அறிவை உயர்த்திடு - 2
வென்று வென்று எழுவோமே
உயர்ந்து நாங்கள் வாழ்வோமே
சிறுவர் நாங்கள் கற்கும் சிறுவர் நாங்கள் - 2
(கல்வி....)

த. றேவதி
தரம் – 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கு எல்லையில்லை...

நம் பாடசாலை கல்வியே நாம் என்றும் உயர்ந்திடுவோம்
வாழ்வில் உயர்ந்திடுவோம் எம் ஆசான் ஆசியிலே
கல்வி நெருப்பென அருகிறதே அதைபடித்திட துடிக்கிறதே
உயர் கல்வியென வாழ்கிறதே நம் ஆசானை வரவேற்கிறோம்

(நம் பாடசாலை கல்வியே.....)

கல்வியிலே குறித்த மனம்
இன்று உணர்வுடன் ஜொலிக்கிறதே
கல்வியை நினைத்த உயிர்
இன்றே ஒளியுடன் ஒளிர்கிறதே
எமக்குச் சொந்தமும் பந்தமும் சுற்றும்
சூழலும் யாவும் கல்விதானே
நாம் பேசிடும் பேச்சும் சுவாசிக்கும் மூச்சும் கல்விதானே
பொங்கும் கடலுக்கு அணையுண்டோ
எம் கல்விக்கு அணையுண்டா

(நம் பாடசாலை கல்வியே.....)

எதுவரை படிக்கணுமோ நாமும் அதுவரைபடித்திடுவோம்
கல்வியின் சுசிவினிலே நாம் என்றும் உயர்ந்திடுவோம்
எங்கள் கல்விக்கும் அறிவிற்கும் இளமையின்
திறனுக்கும் நாம் என்றும் கற்றுடுவேன்
ஆசான் காட்டிய வழியில் என்றுமே நடந்து - எம்
ஆசையை நிறைவேற்றுவோம்
பொங்கும் கடலுக்கு அணையுண்டா
நம் கல்விக்க அணையுண்டா

(நம் பாடசாலை கல்வியே.....)

ஆக்கம்:- தாமரைச்செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு

ஆயிரம் ஆயிரம் கல்விகளை
அறிவில் மகிழ்ந்தே செலுத்துங்களேன்
யாவரும் தேன்மொழி கல்விகளால்
மாணவர்களை உயர்த்திட வாருங்களேன்

படித்திடுவோம் படித்திடுவோம்
எல்லோரையும் உயர்த்திடுவோம்
துன்பமில்லை துன்பமில்லை
கல்வியைத் தொடருங்களேன்

புதிய புதிய கல்விகளை
ஒன்றாய்வச் சேர்ந்தே கற்றிடுங்கள்
அறிவுகள் நிறையும் கல்விகளால்
படித்தே வாழ்வினை உயருங்களேன்
படித்திடுவோம்.....

கல்வியின் சுடரின் ஏணிகளே
அறிவு கூறும் பாடங்களாம்
கல்வியின் ஓசை அறிவுகளில்
மேலும் கல்வியைத் தொடருங்களேன்
படித்திடுவோம்.....

எந்த நாளும் கல்விக்காய்
ஊக்கமாய் நின்று கற்றிடுவோம்
கல்வியைக் கற்கும் மாணவர்களாய்
ஒன்றாய்ச் சேர்ந்து கற்றிடுவோம்
படித்திடுவோம்.....

ஆக்கம்:- சரஸ்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிலவே அறிவு

கல்வி நிலவே ஆசான் நிலவே
காணும் போதே வந்தீரே
நிம்மதியில்லை ஏனில்லை கல்வியில்லையே
மனம் பச்சைத் தண்ணிதான் கல்வி
அதைக் கற்றுத் தந்தவர் ஆசான்
எம் கல்வி என்னும் ஏணியில் ஏற
வழிகாட்டும் எங்கள் குருவே
கல்வி கற்றிட நாங்கள் - அதை
கற்றுத் தந்திட நீங்கள்
கடைசியில் எல்லாம் நிஜங்கள்
என் பிஞ்சு நெஞ்சம் நம்புமா

(கல்வி நிலவே)

கல்வி என்றால் ஒன்று அது கடவுள் போல
உணரத்தானே முடியும் அதில் உருவமில்லை
கல்வி கற்ற இதயம் ஒரு குழந்தை போல
உண்மை தானே சொல்லும் வேறுவார்த்தை இல்லை
குருவே உம் அறிவுரை எல்லாம்
அடி நெஞ்சில் சேமித்தோம்
குருவே உம் இன் சொல் எல்லாம்

கல்வி கற்றது எம் தவறா- அதை
கற்றுத் தந்தது உம் தவறா
சேவை செய்வது உம் தவறா- அதை
புறக்கணிப்பது எம் தவறா
கல்வி கற்கும் மாணவர் இதயம்
சதையல்ல கல்வியின் சுவடா
கல்வி கற்ற நாங்கள்-அதை
கற்றுத் தந்த நீங்கள்
கடைசியில் எல்லாம் நிஜங்கள்
எம் பிஞ்சு நெஞ்சம் நம்புமா

(கல்வி நிலவே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்ற மழையில் - நான்
நனைந்தேன் என்றீர்
எனக்கும் அந்த நனையல்
மிகப்பிடிக்கும் என்றேன்
மொட்டை மாடி நிலவில் - நான்
படித்தேன் என்றேன்
எனக்கும் அந்த வாய்ப்பு
மிகப்பிடிக்கும் என்றேன்.

சுகமான குரல் யார் என்றால்
ஆசானின் குரல் என்றேன்
எனக்கும் அந்தக் குரலில் -ஏதோ
மயக்கம் என நீர் சொன்றீர்
அறிவை தந்திடும் கல்வி முகம்
என் கனவில் வருவது பிடிக்கும்
என்றேன் தயக்கம் என்பது சிறிதுமின்றி
எனக்கும் எனக்கும் தான் பிடிக்கும்
என்றாய் அட உமக்கும் எமக்கும்
எல்லாம் கல்வி வழிகாட்டும்
எங்கள் ஆசான்
கல்வி கற்ற நாங்கள் - அதை
கற்றுத் தந்த நீங்கள்
கடைசியில் எல்லாம் நிஜங்கள்
எம் பிஞ்சு நெஞ்சம் நம்புமா

கல்வி நிலவே

ஆக்கம் :- S. தீபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்

மாணவரே மாணவரே கல்வியில் உயர்ந்துவிடு
எத்தனையோ மானிடத்தில் உயர்வாய் வாழ்ந்துவிடு
இனிமேல் யார்துணையோ ஆசான் நீர் துணையோ
வறுமை உன்னை வாட்டினாலும் கல்வி உயருமே
நல்ல நண்பன் ஒருவன் உள் வாழ்வினில் இருந்துவிடுவான்
(மாணவனே...)

பாண்டவெட்டை ஊரை நாங்கள்
கல்வி ஊராய் மாற்றிடுவோம்
கனவு மட்டும் எனக்கிருந்து
நனவும் கூட ஆகிடிச்சு
கடற்கரை மணலில் எல்லாம்
கல்வி மான்கள் கால்தடம்
உந்தன் பாதம் எங்கே வைத்தாய்
என்று சொல்வாய் என்னிடம்
சில பிள்ளைகளை எம்மிடம் தந்து
ஒரு ஆசானாக மாற்றிவிட்டீர்
வறுமையை ஒழித்து நாமும்
கல்வியால் உயர்த்திடுவோமே
நல்ல நண்பன் ஒருவன் உன்
வாழ்க்கையில் இருந்திடுவான்
கனவு மட்டும் எனக்கிருந்து
நனவும் கூட ஆகிடிச்சு

(மாணவரே)

ஆக்கம்:- S.தர்சினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா நான் படிக்க போறேன்

அம்மா நான் படிக்கப் போறேன்
அன்புடன் முத்தங்கள் தாருங்கள் விரைவாய்
இளமையில் கற்றிட வேண்டும் மென்று
இயல்பினால் ஔவை மூதாட்டி அன்று
சும்மா நான் உட்கார்ந்திருந்தால்
தூய நற் கல்வியை கற்பதெப்போ
எண்ணும் எழுத்தும் கற்றிட வேண்டும்
ஏழ்மை நிலையிலும் விட்டிட வேண்டும்
கற்ற கல்வியை அழிக்க முடியாது
நம் காலம் கடந்தும் எம்மோடிருக்கும்
கவிஞர்கள் அறிஞர்களெல்லாம்
கல்வியால் அன்றோ முன்னேறி நின்றார்
கல்வி எனும் பயிருக்குத் தினமும்
கண்ணீர் எனும் தண்ணீர் ஊற்றிடவேண்டும்
கலையாத கல்வியால் என்றும்
நிலையாக நிற்போம் உத்தமராக
கலைமகள் பாதம் தொழுதால்
கல்வி சிதையாமல் எம்மோடு அறிவாகநிற்கும்

S.சுபர்னா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்திடு தோழா

படித்திடு தோழா படித்திடு
இல்லையேல் நீ படித்திடுவாய் ஓர் சோக ராகம்
பாடிப் பறக்கும் வயதில்தான் தேடிப் படிக்கவேண்டும்
படித்திடு தோழா படித்திடு இல்லையேல்
பாழாய் போகும் உன் வாழ்வு
நாடி ஓடி நாலு பேரும் வருவார் உன்னிடம்
நாடிப் பிடித்துப்பார்க்கும் மருத்துவம்
படித்தாயானால் தேடித் தேடி
பலரும் உன் தேடி வருவார்கள்
தெரிவு செய்து படித்திடு சட்டத்துறையை
படித்திடு தோழா படித்திடு
கண்டிப்பாய் படித்திடு கணிதத் துறையை
கண்டெடுப்பாய் உன் வாழ்வின் காத்திரத்தினை
படித்திடு தோழா படித்திடு
ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவுமில்லை
ஏற்றமுடன் படித்திடு
வேளான்துறையை வெற்றி நிச்சயம் உனக்கு
படித்திடு தோழா படித்திடு
பார் போற்றும் பண்பாழனாய்
நீ வாழ்ந்திட பக்குவமாய்
படித்திடு பள்ளிப்படிப்பை அதனால்
யார் வாழ்விற்கும் உன்வாழ்வு
எடுத்துக் காட்டாகும்
படித்திடு தோழா படித்திடு

P. ஜெயகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கல்வி வேண்டும்

அம்மா நான் படிக்கப்போகிறேன்
அழிந்து போன எனது இனத்தின்
இன்பத்தை மீட்டெடுக்க
அழிவில்லா செல்வத்தைப் பெற்றிடவேண்டும்
அதனால் அம்மா நான் படிக்கப்போகிறேன்

அம்மா நான் படிக்கப்போகிறேன்
சும்மா இனி நான் சுத்தித்திரியமாட்டேன்
சுகந்தமாய் வாழ்வு மலர்ந்திட
சுந்தரக்கல்விவேண்டும் அதனால்
அம்மா நான் படிக்கப்போகிறேன்

அம்மா நான் படிக்கப்போகிறேன்
அந்தரத்தில் தொங்கும் இந்த
பூமியை விட அடுத்தோர்
உலகம் காண அறிவியல் உலகம்
துடிக்கிறது ஆனால் நாங்களோ
அர்ப்பத்தனமான ஆசைகளில்
எம்மை அழிக்கிறோம் இன்
நிலை மாறிட வேண்டும்
அதனால் அம்மா நான்
படிக்கப்போகிறேன்

P. ஜெயகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்விக்கண்"

அம்மா நான் படிக்கப் போறேன்
அறிவு தனைப் பெருக்கிடவே
ஆர்வத்துடன் கல்வி கற்று
அவனியிலே உயர்ந்திடுவீர்

சிறுவயதில் கல்வி கற்று - நாம்
சிறப்புடனே வாழ்ந்திடுவோம்
உயர்ந்து வரும் இவ்வுலகில் - நாம்
உயர்வுடனே திகழ்ந்திடுவோம்

சின்னச் சின்னப் பாலகரை
வேலை செய்யும் அனுப்புவதை
பெற்றோரை உங்களைநாம்
நிறுத்துமென வேண்டுகிறோம்

இவ்வுலகில் சிறுவர்கள் - நாம்
எதிர்காலத்தூண்களென
கல்வி கற்று உயர்ந்திடவே
அனைவருமே உதவிடுவீர்

சி. சுபிதா
வறுத்தோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்கள்

ஆசிரியர் இருக்கும் இடத்தினைத்
தேடிமொக்கும் மாணவர்கள்
ஆசான் உள்ள இடத்தினைத்
தேடிவரும் சிறுவர்கள்

கல்வி நிறைந்த சோலையைப்
பார்த்துப் பாயும் மாணவர்கள்

கல்வி உயர்ந்த நாட்டிலே
வந்துசேரும் மாணவர்கள் போல்
பள்ளமான இடத்தினைப்
பார்த்து உயர்த்தும் கல்வி
நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயிலுவோம்

த. தாமரைச்செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

கமலினி ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள் அவளுடைய தந்தை ஆறுமுகத்தின் உழைப்பு குடும்பத்தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதாமல் இருந்தது. ஒரு நாள் வேலை தேடிச்சென்ற ஆறுமுகம் ஒரு வேலையும் இல்லாமல் வெறுங்கையுடன் திரும்பி வந்தார்.

அன்று உணவு சமைப்பதற்காக ஆவலோடு காத்திருந்த அவரது மனைவி கண்ணம்மாவிற்கு இது ஏமாற்றமாக இருந்தது. பரீட்சைக்காசு கட்டுவதற்காக தந்தையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த மகன் சுரேஸ்சிற்கு பணம் கிடைக்கவில்லை.

அவரது குடும்பத்தின் வறுமை நிலையைக் கண்டு கமலினி வேலைக்குச் செல்லத் தீர்மானித்தாள். தந்தை ஆறுமுகம் அவளை வேலைக்கு அனுப்பச் சம்மதித்தார். தாயும் தனது குடும்ப நிலையை அறிந்த புத்திமதி கூறி அவளை வேலைக்கு அனுப்பி வைத்தாள். கமலினியும் அடுத்தநாளே வேலைக்குச் சென்றாள். கமலினி அந்தவீட்ட எஜமானி தங்கலட்சமி சொன்ன வேலைகளை எல்லாம் தவறாமல் செய்த வந்தாள்.

ஒருநாள் கமலினி தாமதமாக எழுந்ததால் காலைச் சாப்பாடு தயாரிக்கத் தாமதமாகி விட்டது. அவ்வீட்டு எஜமானி. கமலினியைக் கொடுமைப்படுத்துவதை அவனது கணவனும் பிள்ளைகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. கமலினி தாமதமாக எழுந்தமையால் அன்ற காலைச்சாப்பாடு கொடுக்கவில்லை. வேலைக்காறியை அப்படி நடத்தவது தவறு என்று சுட்டிக்காட்டியும் எஜமானி தன்னுடைய நிலையிலிருந்து மாறிவில்லை. கமலினிக்கு அவ்வீட்டு எஜமான் வாங்கி வந்த புதிய ஆடையைத் தனது மகள் மஞ்சுவுக்கக் கொடுத்து விட்டு பழைய ஆடையை அவளிடம் கொடுத்தாள்.

ஒரு நாள் கமலினி தனது பெற்றோரைப் பார்த்து வா அனுமதி கேட்டாள். எஜமானி முதலில் மறுத்து பின்பு அன்று பின்னேரமே திரும்பி வரும்படி கமலினியை அனுப்பிவைத்தாள். தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குச் சென்ற கமலினி அங்கு தனது தோழி சுமதியைச் சந்தித்தாள். சுமதி! மற்றவர் செய்யும் கொடுமைகளை எதிர்த்து கதைக்காமல் இருப்பது அநியாயம் என்று எடுத்துக்கூறினாள். தோழியின் ஆலோசனையைக் கேட்ட கமலினியின் மனதில் புதிய மாற்றம் ஏற்பட்டது.

கமலினி அடுத்தநாள் வீட்டு வேலைக்குச் சென்றாள். கமலினி வீட்டு எஜமானி செய்த கொடுமைகளை எல்லாம் எஜமானிடம் எடுத்துக்கூறினாள். வீட்டு எஜமான் அவள் நிலையைக்கண்டு இரங்கி, சுயதொழில் செய்வதற்காக சிறு தொகைப்பணம் உதவி செய்தார். அவள் எஜமானுக்கு நன்றி கூறி அவ்வீட்டு எஜமானியின் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற்றுச்சென்றாள்.

****

சி. சபிதா
வறுத்தோலை
அறிவு

# பொறுமையைப் பேணுவோம்

பெரியவரொருவர் கூடியிருந்த சிறுவர்களிடம் இந்த உலகத்தில் இழக்கக்கூடாதது எது? என்று கேட்டார். சிறுவர்கள் தத்தமது அறிவுக்கு எட்டிய வரையில் வெவ்வேறு விடையங்களைக் கூறினார். சிறுவர்களின் விடைகள் பொருத்தமாக இல்லாததால் பெரியவர் தானே அவ்விடையைக் கூறுவதாகச் சொன்னார். விடையைக் கேட்கவேண்டும் என்னும் ஆவலில் சிறுவர்கள் "ஐயா" பெரியவரே எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள். நாங்கள் பொறுமையை இழக்குமுன் அந்த விடையினைக் கூறிவிடும்படி கூறினர். இதனைக்கேட்ட பெரியவர் நீங்களே விடையைக் கூறி விட்டீர்கள். பொறுமையே அப்பொருள் என்று கூறினார். பெரியவர், சிறுவர்களிடம் பொறுமைபற்றித் தெரிந்தவற்றைக் கூறும்படி கேட்டார். சிறுவனொருவன் "பொறுத்தார் பூமி ஆள்வார், பொங்கினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடாள்வார்" என்றான். அதனைக் கேட்டுப் பெரியவர் ஆம். பால் பொங்குவதைப் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு பொங்கும் பால் மண்ணிற்சிந்திப் பயனற்றுப்போகும் என்ற விளங்கினார். இன்னும் ஒரு சிறுவன் "பொறுமைக்குத் தருமன் என்பார்களே" என்றான். பெரியவர் தருமனின் பொறுமையையும் அவன் சிறப்பையும் விளக்கிக் கூறினார். சிறுமி ஒருத்தி "பொறுமை என்னும் நகையணிந்து பெருமை கொள்ள வேண்டும். பெண்கள்" என்றாள். இதனைக்கேட்ட பெரியவர் "நன்றாகச் சொன்னாயம்மா" ஆண்களுக்கும் பொறுமை வேண்டும் என்றார். இன்னொரு சிறுவன் "அகழ்வாரைத்தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை" என்னும் குறளைக் கூறினார். பெரியவர் பொறுமையைப் பூமியுடன் சேர்த்து விளக்கினார். மேலுமொரு சிறுவன் "பெரியது பெரியது பொறுமை பெரியது அதனினும் பெரிது" இழமையிற் பொறுமை என்று புதுமொழி கூறினான். பெரியவரும் இளமையிற் பொறுமையைக் கடைப்பிடிப்பது அற்புதமான சாதனை என்று கூறி முடித்தார்.

****

சி. சுபிதா
வறுத்தோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையின் பலம்

ஒருபாடசாலையில் ஒரு வகுப்பில் இணைபிரியா நண்பர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் அந்த நாள்வருக்கிடையில் சண்டைசற்ச்சரவு நிலவி வந்தது. இவர்களது அன்பான சண்டை நிறுத்தமுடியாது என்ற அந்த ஆசிரியர் கூறினார். நண்பர் அவர்களுக்கு ஏற்ற வலுவான சண்டை பாடம் புகற்பட வேண்டும் என்ற உணர்ந்த அவர் சில மூங்கில் குச்சிகளை சேர்த்து ஒரு கட்டுக்கட்டினார். ஆசிரியர் நான்கு நண்பர்களையும் அழைத்துச் சென்றார். அந்த மூங்கில் கட்டையை யார் அப்படியே உடைக்கிறார்களோ அவனே பலசாலி என்று மாணவர் ஒத்துக்கொள்கிறார் என்றார் ஆசிரியர்.

முதலாவது நண்பன் தோற்றுப்போனான். இரண்டாவது நண்பன் தோற்றுப்போனான். மூன்றாவது நண்பர். நான்காவது நண்பன் எல்லோரும் போய் விட்டான். இதனால் "ஒற்றுமையாக இருந்தால் நன்மை தோற்கடிக்கமுடியாது."

மறுபடியும் ஒவ்வொரு குச்சியாக நான்கு பேரும் கொடுத்தார். அனைவரும் அதனை உடைத்தார். ஆசிரியர் நீங்கள் சண்டை பிடித்த தனித்தனியாக இருந்தால் உங்கள் ஒவ்வொருவரையும் தோற்கடித்து விடுவார்கள். இதனாலே நீங்கள் நால்வரும் ஒற்றுமையில் இருப்பார்.

ஒற்றுமையாக ஒன்று கூடி சாதிக்கமுடியும்.
தனித்தாக இருந்தால் ஒன்றும் சாதிக்க முடியாது.

மா. சுகன்யா
கல்வி அறிவு
தரம் - 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் மேன்மை

மீசாலை என்னும் சிறு கிராமத்தில் பல குடும்பங்கள் இணைந்து வாழ்ந்து வந்தார்கள். அக்கிராமத்தில் மோகன் என்னும் ஒருவரின் குடும்பத்தில் அவனின் மனைவி இரு பிள்ளைகள் மகனும், மகளும் அவர்களின் பெயர் சந்தியா, சிம்பு ஆகும். இவர்களின் தாய் தந்தையின் ஆசை இவர்கள் நன்றாக படித்து ஒரு உயர் நிலையில் இருக்கவேண்டும் என்பதாகும். ஆனால் இரு பிள்ளைகளும் நல்ல கெட்டிக்காரர் பாடசாலையிலும் முதல் இடத்தைப் பெறுவார்கள். இரு பிள்ளைகளின் மனதிலும் நாங்கள் அம்மா அப்பாவின் ஆசையை நிறைவேற்றுவோம் என்ற எண்ணம் அவர்களில் குடி கொண்டது. இருவரும் சேர்ந்தே பாடசாலை போவார்கள், வருவார்கள். இருவரும் ஒருவர் மீது ஒருவர் மிக்க அன்பு கொண்டுயிருந்தனர்.

அன்று விடுமுறை சிம்புவின் மாமா யாழ்ப்பாணத்தில் இருந்து அவர்களின் வீட்டுக்குச் சென்றார். மாமாவைக் கண்டதும் சிம்பு மாமா எனது பாடசாலை விடுமுறை எமது பாடசாலை தொடங்கும் மட்டும் நாங்கள் உங்கள் வீட்டில் இருக்கப் போகிறேன் என்று கூறினார். மாமாவுக்கு அவனைக் கூட்டிச் செல்ல விருப்பமில்லை. அவரை மனதுடன் அவனைக் கூட்டிச் செல்ல சம்மதித்தார். சிம்புவுடன் தங்கையும் வரப்போகிறேன் என்று அழுதாள் சிம்பு தங்கை அழவேண்டாம் அடுத்தமுறை கூட்டிச் செல்வார் மாமா என்று கூறி உனக்கு வரும்போது ரொபி, பிஸ்கற் வாங்கி வருவேன் அழ வேண்டாம் என்று கூறி விடை பெற்றான்.

இங்கு சென்று தாய் தந்தைக்க கடிதம் போட்ட வண்ணம் இருந்தான் தொலைபேசியில் கூட பேசுவான். இவ்வாறு இருவாரம் கழிந்தது போட்ட கடிதத்திற்கு பதில் வரவில்லை சிம்பு திகைப்பு அடைந்தான். ஏன் அம்மா பதில் போடவில்லை என்று. அவனுக்கு உடம்பெல்லாம் நடுங்கத்தொடங்கியது. மாமாவின் தொலைபேசி றிங், றிங் என அடித்தது அவன் ஓடிச்சென்று அதை எடுத்து காதில் வைத்தான் கேட்டது தான் தாமதும் அடியற்ற மரம் போல் மயங்கி விழுந்தான். மாமனாரும் செய்தியைக் கேட்டவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைப்படைந்தார். அன்று நடைபெற்ற போர் வீச்சினால் சிம்புவின் வீட்டில் குண்டு விழுந்து மூன்று பேரும் இறந்து விட்டார்கள் என்று செய்தி வந்தது. சிம்பு பச்சைப் பிள்ளை அவனின் மனம் என்ன பாடுபடும். அவன் மயக்கத்தலிருந்து விழித்தான். விம்மி விம்மி அழத்தொடங்கினான். மாமனாருக்குக் கவலை இவனை இனி எங்கு விடுவதென்று சிம்பு தாய்.தந்தை. தங்கையை நினைத்து நினைத்து அழுதான். இவ்வாறு பல நாட்கள் சென்றன. மாமனார் இவனை சிறுவர் இல்லத்தில் சேர்த்து விட்டார். மாமனாரின் குணத்தைப் பார்த்து அவன் வெக்கம் அடைந்தான். அவன் தன்னை திடப்படுத்திக் கொண்டு தாய். தந்தையின் ஆசையை நிறைவேற்றுவதற்காக கல்வியை ஊக்கமுடன் கற்றான். விளையாடும் நேரத்தில் கூட விளையாடச் செல்லாமல் படிப்பான் இவ்வாறு படித்துப்படித்து பல்கலைக்கழகம் சென்று ஒரு உயர் பதவியில் வேலைபார்த்து படிப்பின் மூலம் பேசிய பட்டமும் சூட்டிக்கொண்டான். பின் தாய். தந்தையின் படத்தை வணங்கி தன் உயர்த்திய பெரியோர்க்கு நன்றி கூறி தனது பணியைத் தொடர்ந்தான்.

****

த.றேவதி

# உதவி

ஒரு ஊரில் ஒரு குடும்பம் வாழ்ந்து வந்து அந்த குடும்பம் அதிக வறுமையுடன் வாழ்ந்தது அந்த குடும்பத்தில் தாயும் மூன்று பிள்ளைகளும் அந்தப் பிள்ளைகளில் ஒன்று பெண் பிள்ளை அந்த பெண்பிள்ளைக்கு படிப்பதற்கு ஆசை ஆனால் அதற்கு பணவசதி இல்லை. அதனால் அந்த பிள்ளைக்கு படிப்பதற்கு அதிக வறுமையாக இருந்தது. ஆனால் அந்த பிள்ளை இடையில் பாடசாலை போகவில்லை அதனால் அண்ணனுக்கு கவலை இப்படி படித்த தங்கை இடையில் நிறுத்திவிட்டது. காரணம் பணம் இல்லை. இந்த குடும்பத்திற்கு அப்பா இல்லை. அதனால் மூத்த மகன் சிவகுமார் ஒரு முடிவுக்கு வந்தான். நான் ஒரு வேலைக்குப்போனால் தங்கையை படிக்கவைக்கலாம் என்று யோசித்தான். அவன் நினைத்தமாதிரியே ஒரு வேலை கிடைத்தது. அப்போது அந்த குடும்பத்தில் சந்தோசம். தங்கையும் படிக்க ஆர்வம் கொண்டாள். அந்த குடும்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமாரின் தம்பிக்கு படிக்கத்தெரியாது அந்த தம்பி அக்கா இப்படி நீ படிக்கிறாய் இன்னும் படிக்கப்போகிறாய் நாளைக்கு நானும் பாடசாலைக்கு வருவேன் என்றான். தம்பி அவசரப்படாதே நீ முதல் இந்த மாதிரி இரு நான் ஒரு முடிவு எடுப்பேன். பிறகு சிவகுமாரின் தங்கை படித்து உத்தியோகம் பார்த்தபோது அவருடைய தம்பிக்கு படிக்க ஆரம்பித்தான். தம்பி சிவாவும் படிக்க ஆரம்பித்தான். அவனும் உத்தியோகம் பார்த்தான் அந்த குடும்பத்தில் ஒரு வறுமையும் இல்லை. பிறகு அக்காவும், தம்பியும் தங்களுடைய அண்ணனுக்கு நன்றி சொன்னார்கள். பிறகு இருவரும் சேர்ந்து வேறு வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்தார்கள்.

நன்றி

*****

**சி. றதீஸ்வரன்**

# ஏழையின் கல்வி

ஒரு கிராமத்தில் ஏழைக் குடும்பம் ஒன்று வாழ்ந்தது வந்தன. அவர்களுக்க 2 பிள்ளைகள் அதில் மூத்த பிள்ளை நல்லாக படிப்பார். 2வது பிள்ளை படிக்கமாட்டார். மூத்தவர் பாடசாலைக்கு போவார். 2வது பிள்ளை பாடசாலைக்கு போகமாட்டார்.

மூத்தபிள்ளை கலைத்திறனில் ஒரு மாணவராக அவர் இருந்த அந்தக்கிராமத்தில் அந்த மாணவனுக்க நல்ல மரியாதையாக இருந்தது. 2வது தம்பி பாடசாலைக்கு செல்ல விருப்பமில்லாமல் மற்றவர்களுடன் கதைத்த ஒதுங்கி இருந்தார். அவரிற்கு என்ன பிரச்சனை என்று மூத்த அண்ணா ஆராய்ந்துபார்த்து தம்பிக்கு நல்ல புத்திமதி கூறி கல்வி நடுவாழ்க்கைக்கு அத்தியவசியமானது என்று உணரவைத்து தனது தம்பியின் மனசை மாற்றினார். பின்பு அந்தத்தம்பி ஒரு இடத்தில் இருந்து யோசித்துப் பார்த்து அவருக்கு கல்வின் அருமை அப்பத்தான் தெரிந்தது. அம்மாவின் அன்பினாலும் இந்தத் தம்பியும் அம்மா நான் பாடசாலை போகப்போகிறேன் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷமாக கூறினார். அண்ணாவும் தம்பியும் சந்தோசமாக பாடசாலைக்கு சென்று கல்வி கற்று அவர்கள் அந்தக்கிராமத்தில் ஒழுக்கமான பிள்ளைகளாகவும் அந்தக்கிராமத்தில் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக அவர்கள் இருந்தார்கள். அந்தக்குடும்பம் கல்வியில் செழிப்பாய் சந்தோசமாக வாழ்ந்தார்கள்.

****

T.Thamaraiselvi

# ஏழைக்குடும்பம்

ஒரு அழகான கிராமம் அந்தக் கிராமத்தில் ஒரு அம்மாவும் அந்த அம்மாவுக்க இரண்டு பிள்ளைகள் இவைகள் மூன்று பேரும் அந்தக்கிராமத்தில் வசித்து வந்தனர். அந்தக் குடும்பம் ஒரு ஏழைக் குடும்பம் அந்த அம்மா வேலைக்கு போய் தான் தன்னுடைய இரண்டு பிள்ளைகளுக்கு உணவு சமைத்துக் கொடுப்பார். ஒருநாள் அந்த அம்மாவுக்கு வருத்தம் வந்து விட்டதால் தனது இரண்டு பிள்ளைகளை பார்க்க முடியாமல். பேசாது அந்த பிள்ளைகள் வேலைக்குப் போய் அவைகள் தருகிற காசில் தனது அம்மாவையும். பார்த்து தாங்கள் பள்ளிக்கூடம் சென்றனர். அந்தப்பாடசாலை ரீச்சர் இந்த இரண்டு பிள்ளைகளையும் பார்த்து ஏன் பள்ளிக்கூடம் வருவதில்லை என்று கேட்டார். இந்த இரண்டு பிள்ளைகளும் நடந்தவற்றை கூறினார். அந்த ரீச்சர் பாராட்டினார். இந்த ரீச்சர் இரண்டு பிள்ளைகளையும் கவனித்தார். அந்த ரீச்சர் ................ படித்து கொடுத்து பின்னேரமும் படித்துக் கொடுத்து வந்தார். இந்த இரண்டு பிள்ளைகளும் படிப்பில் முன்னேற O/L, A/L பாஸ் பண்ணி ............
அந்த இரண்டு பிள்ளைகளுக்கும் ஒரு வேலையைப் பாக்க தொடங்கினார். இந்த குடும்பம் ஒரு ஏழை குடும்பமாய் இருந்தது. இப் ஒரு வசதிக்குடும்பம் ஆகிவிட்டது.

நன்றி

ர. நாகவதனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

ஒரு ஊரிலே ஓர் கணவன் மனைவி இருவர் வாழ்ந்து வருகிறார்கள். அதே நேரம் அவர்களுக்கு ஓர் ஆண்பிள்ளையும், பெண்பிள்ளையும் வாழ்ந்து வருகிறார்கள். இக்குடும்பமானது வறுமைக்கோட்டில் வாழ்ந்து பின்னர் ஓர் நாள் இருபிள்ளைகளும் பாடசாலைக்குப் போவார்கள். அன்று ஒரு நாள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அந்தப்பையன் பார்த்து எழுதிக் கொண்டிருந்தான் அந்த ஆசிரியர் கண்டு உடனே அடித்தார் ஏன் படித்துவிட்டு வரவில்லையா என்று கூறிய பதில் என்னுடைய வீட்டில் படிக்க வசதியில்லை என்றான். ஏன் அப்படி உனக்கு வசதி இல்லை என்ற கேட்டபோது அதற்க அவன் என்னுடைய அப்பாவிற்கு எயிற்ச் வருத்தம் அதனால் அம்மா என்னையும் தங்கையையும் படிப்பிக்கவேண்டும் என்ன செய்வது இனி நான் தான் மாஸ்சேரி வேலை செய்து என் குடும்பத்தை பார்க்கவேண்டும் என்று சொன்னார். இப்படி தம்பி நீ செய்தது தப்புத்தான் என்றாலும் இப்போ உம்முடைய வாழ்க்கையைப் பார்த்தால் எனக்கு சரியான கவலையாகி இருக்கிறது. இனி நீ என்னுடைய சம்பளத்தில் உன் தங்கையை படிக்க வைக்கிறேன் என்றார். பின்னர் படிக்காது தங்கை பெரியாளாக வந்தாள். பின் தகப்பனின் வருத்தத்தை மாற்ற எவ்வளவு திட்டம் செய்தும் அவர்களுடைய தகப்பனுக்க குணமாக வருவதில்லை. பின்னர் இறந்து விட்டார். என்ன செய்வது என்றார்கள். ஒன்றுமே செய்யவில்லை. பின் அத்துடன் முடிந்து விட்டது. அண்ணனின் ஆர்வத்துடன் படித்த தங்கை மிகவும் முதலிடம் பெற்றார்.

நன்றி

***

பெ. மேகலா
தரம் – 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏணி

ஒரு ஊரில் தாய், தந்தை, பிள்ளை இருவர்கள் வாழ்ந்து வந்தார்கள். தாய், தகப்பனின் கனவு தனது மூத்த மகனை படிப்பித்து பெரிய வைத்தியராக வரவேண்டும் என்று. அவர்களது ஆசையாக இருந்தது. மூத்த மகனின் பெயர் கமலன். அவரின் தங்கையின் பெயர் மாலா. இவர்கள் பெற்றோர்கள் ஆசையின் படி இவர்கள் மிகவும் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் கல்வியைத் தொடர்ந்தனார். இவ்ர்கள் பற்றி அயலில் உள்ள அனைவருமே கதைத்தனர்.

கமலன் மேலும் படித்து O/L பரீட்சையில் சித்தியடைந்த எல்லோரையும் சுற்றுலாவுக்கு கூட்டிச் சென்றார்கள். கமலனும் சுற்றுலாவுக்கு சென்றான். கமலனின் வீடு கடற்கரைக்கு அண்மையில் அமைந்திருந்ததால் சுனாமி வந்து எல்லாக் குடிமனைகளையும் அடித்து சென்று விட்டது. எல்லாம் தரைமட்டமாய் காணப்பட்டது. கமலனின் அம்மா, அப்பா, தங்கை எல்லோரும் இறந்து விட்டனர். கமலன் வந்து கத்திக் கதறினான். இவ்வாறு இரண்டு நாட்களாக அவனின் பெற்றோரைத் தேடித் தேடிக் கலைத்துப்போனோம். கொழும்பில் இருக்கும் மாமா கமலனை கூட்டிச் சென்று கமலனை மேலும் படிப்பித்தார். இவன் படித்து A/L பரீட்சையிலும் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டான். இவன் பல கலைகளையும் கற்று M.B.B.S பட்டம் பெற்று பெற்றோரின் ஆசைப்படி பெரிய வைத்தியராக வந்தான். அவன் எல்லோருக்கும் இலவசமாக வைத்தியம் பார்த்தான்.

ம. துசாந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகளும் கருத்துக்களும்

01. அழுதபிள்ளை பால் குடிக்கும்
- முயற்சி செய்பவர் பயன் பெறுவர்

02. இரக்கப் போனாலும் சிறக்கப்போ
- வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும்

03. பேராசை பெருந்தரித்திரம்
- எல்லை கடந்த ஆசை துன்பந்தரும்

04. முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்
- விடாது முயற்சி செய்தால் வெற்றி கிட்டுவது நிச்சயம்

05. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
- சந்தப்பத்தைத் தவறவிடக்கூடாது

06. நாமென்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது
- எண்ணியபடி எதுவும் நடப்பதில்லை

07. விளையும் பயிரை முளையில் தெரியும்
- ஒருவனின் சிறுவயதுப் பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம்.

08. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் போய்
- பயமுள்ளவனை எல்லாம் பயமுறுத்தும்

09. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்
- கோபம் வருமிடத்து நிதானம் குறைந்துவிடும்

10. தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை
- இளமையில் பழகும் பழக்கங்கள முதுமைவரை நிலைத்த நிற்கும்.

11. கோபம் பாவத்தைத் தேடும்
- கோபம் ஒருவனுக்குத் தீமையை ஏற்படுத்தும்

செல்வி. ச. சிந்துஜா
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

01. வரும்போது வெண்சிவப்பு! வளர வளரத் தகதகப்பு! போகும்போது கடும்சிவப்பு! அது என்ன?
சூரியன்

02. மழைக்காலம் வந்துவிட்டால் மகராசி பாட்டெடுப்பாள் அவள் யார்?
தவளை

03. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர் அவர் யார்?
செங்கல்

04. கல்வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார். அவர் யார்?
ஆமை

05. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்?
மண்புழு

06. புத்தாண்டில் புகுந்து விருந்தாளி தங்குவதோ ஓராண்டு அவன் யார்?
கலண்டர்

07. வெயிலில் மலரும், காற்றில் உலரும் அவன் என்ன?
வியர்வை

08. தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?
பென்சில்

09. உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவார் அவர் யார்?
தராசு

10. ஊசி போட்ட வைத்தியர் பாடிக்கொண்டு போகிறார். அவர் யார்?
நுளம்பு

செல்வி. ச. சிந்துஜா
தரம் -05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்வியும் உழைப்பும்

இன்று எல்லோருக்கும் தேவையான செல்வம் கல்விச் செல்வமே. ஆனால் எம்முடைய பொழுது போக்குக்காக பல தீய செயல்களும் செய்கிறோம். சில நன்மைச் செயல்களும் செய்கிறோம் எமக்கு எந்த அளவுக்கு கண் தேவையோ அதேயளவுக்கு கல்வியும் அவசியம். ஏன் இப்போது குருடாக இருந்தும் படிக்கேலாதா கேட்டல் மூலம் தான் படிக்கலாம். கண் தெரிந்த ஒருவர் கற்பித்தல் மட்டும் அல்லாமல் வேறு எதையும் செய்யலாம் ஆனால் கற்றலும் கற்பித்தலும் எமக்கு மிக அவசியம் அல்லவா.

ஒருவன் வாசிப்பு மூலம் பூரணம் அடைகின்றான் என்றால் நூல்களை அதாவது எல்லா புத்தகங்களையும் வாசிக்கின்றான். தேவையானவற்றை கடைப்பிடிக்கின்றான். அதைப்போன்று விளையாட்டு மூலம் நாம் படிப்பைக் கற்றுக் கொண்டால் எமது கல்வி மேலும் மேலும் உயர்ந்து கொண்டு போகும். சிறுவயதில் இருந்து பழகின பழக்கவழக்கங்கள் அதாவது ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்று ஒரு பழமொழி உண்டு. இதை நோக்குவோம் ஆனால் எந்த நல்ல பழக்கமோ எந்த தீய பழக்கமோ சின்னவயதில் அதாவது பாடசாலை படிக்கும் வயதில் நாம் எதை கருத்தில் கொண்டு நடக்கிறோமோ அதே பிற்காலத்துக்கு நமக்கு உதவி செய்யும்.

அதாவது பொறுமையை பார்ப்போம் ஆனால் எல்லாவற்றிலும் பொறுமை கடைப்பிடிக்கவேண்டியதில்லை. சில சில விடயங்களில் நாம் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். அதேபோல் உழைப்பு அயராது எமக்கும், தேவை எமது சமூகத்துக்கும் உழைப்பு தேவை. ஒரு மனிதன் உழைப்பின் சக்தியை மட்டும் பயன்படுத்தினால் போதாது அந்த உழைப்புடன் தன் எண்ணத்தையும் கலக்கவேண்டும். மனித குலத்தக்குச் சேவை செய்வதே மிக உயர்ந்த வழிபாடு. உழைப்பு எந்த மனிதனையும் ஏமாற்றுவதில்லை. மனிதன் தான் ஏமாற்றுகிறான் அந்த எல்லோரும் உணரவேண்டும்.

ஒழுக்கத்தைப் பார்ப்போம் பணிவு என்பது தாழ்வின் சின்னமல்ல உயர்வான ஒழுக்கத்தின் அறிகுறி. பொறுமையை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த தவமில்லை. மன்னிப்பதைவிட ஆற்றல் மிக்க ஆயுதம் இல்லை. ஒழுக்கத்தால் உயர்ந்து கொள் சான்றோருடன் பழகு ஆனால் அவர்களின் நல்வழி நட. நீதி தவறாமல் ஒழுக்கத்தை பின்பற்று. உறுதியாக உயர்ந்திட முடியும். நாம் அதாவது இந்நிகழ்வின் மூலம் எமக்கு கிடைத்த சந்தோஷம் படிப்பின் விருத்தி. கிராமத்தில். விளையாட்டின் மூலம் பெற்ற நன்மை எம்முடைய இசையசையால் எமக்கு ஏற்பட்ட குதூகலம் அதாவது ஆனந்தம் எமக்கு கிடைத்த பொக்கிசம் என்று இந்நிகழ்வின் மூலம் நான் பெற்ற நன்மை எண்ணிட முடியாதது.. இதே போன்று எமக்கு இன்னும் நிகழ்வுகள் வைத்து வழிநடத்த இறைவன் அருள் எமக்க கிடைக்கும் என கூறி நிறைவு செய்கின்றேன்.

குழுவின் பெயர் கண்
கு. சுகிர்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை துணுக்குகள்

| | | |
|---|---|---|
| ஒருவர் | - | கத்திசாணை பிடிப்பீர்களா |
| சாணைபிடிப்பவர் | - | கத்தவெல்லாம் முடியாது. அமைதியாகத்தான் சாணைபிடிப்பேன். |
| ஒருவர் | - | நீங்கள் கடை பூட்டிப்போடுவீர்கள் என்று மூச்சுவாங்க ஓடி வருகிறேன். |
| கடை முதலாழி | - | நாங்க மூச்சு விற்பதில்லை சேர். |
| ஒருவர் | - | அவசரம் ஒரு வடை தாங்க ரயிலைப் பிடிக்கப் போகிறேன். |
| வ.விற்பவர் | - | வடையை வைத்து எலியையே பிடிக்க முடியாது. எப்படி சேர் ரயிலைப் பிடிப்பாய். |
| ஒருவர் | - | பொலிஸ் கான்ஸ்டபிள் பக்கிரி காலி வீதியில் 48ம் நம்பர் வீட்டில் திருடப்போய் பிடித்து விட்டார்கள். |
| பொ.இன்ஸ்பெக்ரர் | - | எங்களுக்கு அறிக்காமல் ஏன் போனவர் |
| டாக்டர் | - | உங்கள் கால்கை எல்லாம் வளமைக்கு வந்து விட்டது. கட்டுக்களை அவிழ்த்து இரு கைத்தடியும் இல்லாமல் நடக்கலாம். |
| நோயாளி | - | எனது வழக்கறிஞர் வழக்கு முடியும் வரை கழட்ட வேண்டும் என்று இரு கைப்பிடிகளுடனும் நடக்கச் சொல்லியிருக்கிறார். |
| டாக்டர் | - | ??? |
| ஒருவர் | - | ஆட்டு சூப் இரண்டு ரூபாக்கு தாங்கோ |
| வந்தவர் | - | சூப்புக்குள் இலையான் இருக்கோ |
| சர்வர் | - | இரண்டு ரூபாய்க்குள் கோழிச்சேவலைப் பார்க்கிறாயா? இலையான் தான் இருக்கும். |
| வந்தவர் | - | ??? |

செல்வன். S.பார்த்திபன்
தரம் -11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவேரி கலாமன்றத்தின் செய்திகள்

மன்றத்தின் இரண்டாவது பொதுக்கூட்டம் மன்ற தலைவர் திரு.V.புஸ்பராசா அவர்களின் தலைமையில் பராளை வீதியிலுள்ள எமது கலாமன்ற அலுவலகத்தில் 01.05.2009 அன்று நடைபெற்றது. மன்றத்தின் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவராக திரு.ஏ.புஸ்பராசா அவர்களும், செயலாளராக செல்வி.T.தயாரானி அவர்களும் . பொருளாளராக செல்வி.V.கனிஸ்டா அவர்களும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

# டெங்கு விழிப்புணர்வு

டெங்கு விழிப்புணர்வை வழியுறுத்தம் “ஓடிப்போ” என்ற எமது தெருக்கூத்து மானிப்பாய் பிரதேச வைத்திய பணிமனை மற்றும் வலிமேற்கு பிரதேச சபை ஆகியவற்றின் அனுசரணையோடு, சங்கானை நகரம், அராலி மேற்கு, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை தெற்கு போன்ற பிரதேசங்களில் நடைபெற்றது. தொடர்ந்தும் பல இடங்களில் நடைபெறும்.

# பஜனை

வெள்ளிக்கிழமை தோறும் காட்டுப்புலம், பாண்டவெட்டை, வறுத்தோலை கிராமங்களில் சைவசமய பஜனை பக்தி பூர்வமாக மன்றத்தின் ஒழுங்கில் சிறப்பாக நடைபெறுகிறது.

# அம்மா நான் படிக்கபோறேன்

காவேரி கலாமன்றத்தின் வளவாளர்களின் துணையுடன் திரு.சிறீ[illegible]ராஜா (தாத்தா) அவர்களின் தலைமையிலும் வண.T.S.யோசுவா அவர்களின் வழிகாட்டலிலும், ஆகஸ்ட் 6 முதல் செப்ரெம்பர் 6 வரை ஒரு மாத கல்வித்திருவிழா பாண்டவெட்டையில் நடைபெற்றது. இந்த கல்வித் திருவிழாவில், சங்கானை பிரதேச செயலகம், வலிமேற்கு பிரதேசசபை மற்றும் பலதொண்டு நிறுவனங்களின் பெரியார்கள், உத்தியோகத்தர்கள் கலந்து அனுபவபகிர்வை செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவேரி கலாமன்றத்தின் பண்ணைச் செய்கை

மன்றத்தின் நிதி வளர்ச்சிக்கும் உறுப்பினர்களின் தொழில் மேம்பாட்டுக்கும் பண்ணைச்செய்கையும். கீரைத்தோட்டமும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## கோடாலி தெருக்கூத்து

காவேரி கலாமன்றத்தின் சிறப்பு மது ஒழிப்பு தெருகூத்து. உலகதரிசன "World vision" நிறுவன அனுசரணையுடன் கோப்பாய். நுனாவில். கட்டுவான் போன்ற பிரதேசங்களில் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

## தேசிய நிகழ்ச்சியில் மன்ற இசை நாடகம்

இலங்கை உள்ளூராட்சி அமைச்சினால் நடைபெற்ற கண்காட்சியில் வலிமேற்கு பிரதேசசபையின் செயல்திறன் காட்சியாக எமது மன்றக்கலைஞர்களின் உருவாக்கத்தில் உருவான டெங்கு விழிப்புணர்வு இசை நாடகம் கொழும்பு பண்டாரநாயக்க மண்டபத்தில் ஒளி. ஒலி வடிவில் காட்சிப்படுத்தப்பட்டு பாராட்டை பெற்றுள்ளது. மேலும் இலங்கை தேசிய தொலைக்காட்சி ITN தொலைக்காட்சியிலும் இசைநாடகம். நிகழ்வு செய்தியாக காட்டப்பட்டுள்ளது.

## தேர்ச்சி

எமது மன்றத்தின் பல உறுப்பினர்கள் வடமாகாண சங்கீத சபையால் நடாத்தப்படும் சங்கீத பரீட்சையில் சிறப்பு தேர்ச்சி பெற்றுள்ளார்கள். மேலும் பலர் மிருதங்கம். தபேலா. வயலின் போன்ற இசைத்துறையில் பயிற்சி பெற்றுவருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கத.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க ஒரு கணம்...

## காலத்தில் உன் பெயரை
## எழுதிவை.......

நீ நடந்த பாதையில்
நிலம் அதிர்ந்ததா "இல்லை"
நிழல் பதிந்ததா, "இல்லை"
நிலையாய் பாதம் பதிந்ததா, "இல்லை"
நிஜமென்ற எண்ணத்தில், "ஆம்"
நினைக்காத நினைவுகள், "ஆம்"
நிலைத்திருக்கவொருவழி, "உண்டு"
நிழல்கொடு பிறருக்காய் நிஜம்பேசு "கனிவாய்"
நீ என்ற உனக்குள் " புதைந்து"
நீ மட்டும் நிற்காமல் - உன்
நினைவெல்லாம் பிறர்நலமென்றால்
நீ நடந்த பாதையில்
நிஜமாய் பூமலரும் -உன்
நினைவாக காலம் உன் பெயரை
நினைத்திருக்கும்.

- பாமரன்-

அனுசரணை :- JDCSI LMI திட்டம்

சாய்ராம் பிறிண்டேர்ஸ்,சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org